**CC.48/2022** Dt: 26.10.2023

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.610/2023 Dt–03.02.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of October 2023.

26.10.2023

அ.சா.4–சண்முகநாதன்

(2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**குறிப்பு:** சாட்சி 19.12.2022ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) அசா.1 சக்திவேல் எனது உடன்பிறந்த சகோதரியின் கணவர் என்று சொன்னால் சரிதான். அசா.2 கோவிந்தராஜ் அசா.1ன் தம்பி என்று சொன்னால் சரிதான். அசா.3 மீனாட்சி எனது உடன்பிறந்த சகோதரி என்று சொன்னால் சரிதான். எனது வீடு ஊருக்குள் உள்ளது என்றால் சரிதான். அசா.1 சக்திவேலின் வீடு அபிராமம் நெடுங்குளம் செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அசா.1 சக்திவேலின் வீட்டிற்கும் ஒரு கீ.மீ. தூரம் இருக்கும் என்றால் இல்லை 200 மீட்டர் இருக்கும்.

2) சம்பவம் நடந்த நேரம் இரவு 08.00 மணி இருக்கும். நான் 08.00 மணிக்கு வீட்டில் தான் இருந்தேன். வீட்டில் நான் சண்டை நடப்பதாக கேள்விபட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். எனது அக்கா மகள் ஷாலினி சொல்லித்தான் சண்டை நடப்பது தெரியும். சத்தம்கேட்டு நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஷாலினி சொல்லித்தான் சென்றேன் என்றாலும் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் ஷாலினி சொல்லித்தான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று கூறினேன் என்றால் சரிதான்.

3) சம்பவம் நடந்ததாக கூறப்படும் 6 மாதம் முன்பு தான் உள்ளாட்சி தேர்தல் நடந்தது என்றால் சரிதான். உள்ளாட்சி தேர்தலில் அசா.1ன் அண்ணன் பாலகிருஷ்ணன் போட்டியிட்டார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணனை எதிர்த்து புழுதிக்குளம் கிராமத்தை சேர்ந்த சண்முகப்பிரியா போட்டியிட்டார் என்றால் சரிதான். சண்முகப்பிரியா தான் தேர்தலில் வெற்றி பெற்றார் என்றால் சரிதான். 1ம் எதிரி குருநாதன் சண்முகப்பிரியாவிற்கு ஆதரவாக செயல்பட்டார் என்றால் சரியல்ல. தேர்தலில் எதிரிகளின் குடும்பத்திற்கும் அசா.1ன் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4) எதிரிகளுக்கு பூர்வீகம் நாகனேந்தல் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் ஊரிலேயே இல்லாமல் இருந்துகொண்டு அசா.1 எனது அக்காவின் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1யை நான் அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்று நான் புகார் கொடுத்து விட்டு அசா.1யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் காவல்நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் நான் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) அசா.2 கோவிந்தராஜ், ஆஜர் 2ம் எதிரியை அடித்ததாக அதனால் 2ம் எதிரி காயம்பட்டு மருத்துவமனையில் இருந்தார் என்றால் 2ம் எதிரி மருத்துவமனையில் இருந்தார் கோவிந்தராஜ் அடித்தாரா என்று எனக்கு தெரியாது. அசா.2 கோவிந்தராஜ் மீது 2ம் எதிரி புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆஜர் 2ம் எதிரி, அசா.2 கோவிந்தராஜ் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் பொய்யாக இந்த வழக்கு எதிரிகள் மீது என்னால் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>CC.48/2022</u>** Dt: 26.10.2023

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.610/2023 Dt–03.02.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of October 2023.

<u>26.10.2023</u>

<u>அ.சா.6–பாண்டி</u>

(2 ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**<u>குறிப்பு:</u>** சாட்சி 19.12.2022 ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) நான் கையொப்பம் எதற்காக போட்டேன் என்றோ, நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஒரு கையொப்பம் தான் செய்தேன் வேறு எதுவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.